தமிழர் பேரவை
TAMILS REPRESENTATIVE COUNCIL
[ESTB 1951]

பேரவை PERAVAI

Issue: 01/2009

M.I.C.A (P) NO. 222/07/2008 தமிழுக்கும் தமிழருக்கும் வளம் சேர்ப்போம் மார்ச் 2009 March 2009

Dialogue Session with Community Leaders



Community leaders at the Dialogue Session

TRC being the representative body of the Tamil speaking community conducts regular feedback and dialogue sessions with its fellow community organizations and members.

The first session for this year was held on 11.01.2009. More than 50 representatives from over 30 organisations turned up for the event. Mr Karmegam, (former Head of Tamil News, Media Corp) had been requested by TRC to facilitate the discussion.

After a 2 hour session, members and leaders of the various organisations, reiterated and re-endorsed their support to TRC and gave TRC the mandate to represent the Tamil Speaking Community on issues faced by the Tamils.

Apart from the above, the following issues were also discussed and TRC was requested to raise them with the relevant authorities where necessary:

- Quality of programmes in Vasantham Central should be improved;
- Coordination of Activities amongst the Community Organisations;

.....continued on page 5

CONGRATULATIONS!

TRC congratulates Ms K. Kanagalatha, editor of Tamil Murasu, for being awarded the Singapore Literary Prize for Tamil books. Her book entitled, Naan Kolai Seyum Penkal has been well received by the Tamil community in Singapore.

"ஒரு குடையின் கீழ் இணைவோம்" கலந்துரையாடல்



Dr. Balaji facilitating the discussion

தமிழ் பேசும் சமூகத்தின் பிரதிநிதித்துவ அமைப்பான தமிழர் பேரவை, சக அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடல்களுக்கு செய்து வருகிறது.

இவ்வாண்டின் முதல் கலந்துரையாடல் 11.1.2009 அன்று இலங்கை விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. சிங்கப்பூரின் வெவ்வேறு தமிழ் அமைப்புகள் ஒன்று கூடி எப்படி ஒற்றுமையாக, ஒரு குடையின் கீழ் இயங்கமுடியும் என ஆராயும் நோக்கத்தில் பேரவை இக்கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

30 அமைப்புகளைச் சார்ந்த 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். தொலைக்காட்சி தமிழ் செய்திப் பிரிவின் முன்னால் தலைவர், திரு கார்மேகம் கலந்துரையாடலுக்கு தலைமை ஏற்று கூட்டத்தை வழி நடத்தினார்.

இரண்டு மணி நேர கூட்டத்திற்கு பிறகு, தமிழர் பேரவைதான் சிங்கப்பூரின் தமிழ் பேசும் சமூகத்தினருக்கு தலைமை வகித்து, அதன் பிரச்னைகளை ஆராய்ந்து, மற்ற அமைப்புகளுடன் கலந்து பேசி, பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் என ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது. சிங்கப்பூர் தமிழர்களையும், தமிழ் அமைப்புகளையும் பேரவை தொடர்ந்து பிரதிநிதிக்க வேண்டும் எனவும் அனைவரும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டனர்.

மேலும் கீழ்கண்ட தீர்மானங்களையும் கூட்டம் ஏற்றுக் கொண்டது:-

- வசந்தம் செண்டரலின் நிகழ்ச்சிகளின் தரம் மேம்படுத்தப்படவேண்டும்.
- அமைப்புகள் ஏற்பாடும் செய்யும் நிகழ்ச்சிகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
- தமிழ் அமைப்புகளின் வளர்ச்சிக்கு அடுத்த தலைமுறையினரை தயாராக்கும் வகையில் தலைவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் அளிக்க வேண்டும்.
- இளையர்களை சமூகப் பணியில் ஈடுபடுத்துவதற்கு அவர்களை ஈர்க்கும் வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

.....தொடர்ச்சி பக்கம் 5

28-9410 TRC.indd 1 3/18/09 6:12:14 PM

சிற்பிகள் வாசகர் வட்டத்தின் அதிகாரபூர்வ தொடக்க விழா

LAUNCH OF SIRPIGAL'S READING CLUB

சிற்பிகள் மன்றம் தமிழில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க தேசிய நூலக வாரியத்தின் ஆதரவோடு ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 31ஆம் தேதி அன்று சிற்பிகள் வாசகர் வட்டத்தை அதிகாரபூர்வமாக தொடங்கியது. தமிழர் பேரவையின் தலைவர், Dr. R. தேவேந்திரன், PBM அவர்கள் அதனை தொடங்கி வைத்தார். அவரோடு நிகழ்ச்சியில் பல சமூக தலைவர்களும் கலந்துக்கொண்டனர்.

கலைகள் வழி இந்திய இளையர்களை நல்வழி படுத்துதல், அவர்களை சமூகசேவையில் ஈடுபடுத்துதல், பரந்த உலகை புரிந்துகொண்டு முன்னேறுதல் - இவையே தமிழர் பேரவையின் துணை அமைப்பான சிற்பிகள் மன்றத்தின் நோக்கங்கள். அதன் படி, ஒரு குறுகிய வட்டத்தில் இருந்து வெளியே வர உதவும் வாசிப்பு பழக்கத்தை மையமாகக்கொண்ட வாசகர் வட்டத்தைச் சிற்பிகள் மன்றம் தொடங்க முன் வந்தது.

"மனநலம் குன்றிய மூத்தவர்களைக்கொண்ட Sunlove Home இல்லத்தில் இந்த தொடக்கவிழாவை ஏற்பாடு செய்ததால், அது அர்த்தமுள்ள நிகழ்ச்சியானது. வெளியே செல்ல இயலாத இங்குள்ள இல்லவாசிகளை ஆடல், பாடல், நாடகம் வழி மகிழ்வித்தது மனநிறைவை அளிக்கிறது" என்று சிற்பிகள் மன்ற தலைவர் திரு குணசேகரன், PB கூறினார்.

நிகழ்ச்சியில் முத்தாய்ப்பாக உள்ளூர் எழுத்தாளர் சே. வே. சண்முகம் எழுதிய மண்ணுக்குள் வைரம் என்ற சிறுகதையை நாடகவடிவமாக சிற்பிகள் மன்றத்தினர் படைத்தனர். நாடகத்தின் இடையே இடம்பெற்ற ஆடல், பாடல் அங்கங்களை நூற்றுக்கும் மேற்பட்ட Sunlove Home இல்லவாசிகள் கண்டு களித்தனர்.

"இந்த நிகழ்ச்சி மனநலம் குன்றியவர்களுக்கும் நமது உள்ளூர் எழுத்தாளர்களின் படைப்புகள் போய் சேர நல்லதொரு முயற்சி. சிறுகதையை நாடகவடிவமாக படைத்ததால், அவர்களால் அதை பார்க்கமுடியும், கேட்கமுடியும், உணர்ச்சிப்பூர்வமாக உணரமுடியும். ஆகையால் கதையை நன்றாக புரிந்துக்கொள்ள உதவுகிறது' என்று தேசிய நூலக வாரியத்தின் அதிகாரி K.S. மணியம் தெரிவித்தார்.

"சிறுகதையை நாடகமாக நடித்தபோது, குடும்பத்தில் உள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் இடையே உள்ள உறவினைப் பற்றி ஆழமாக சிந்திக்க தோன்றியது. மனைவிக்கும் மகளுக்கும் இடையே மாட்டிக்கொண்டு தவிக்கும் தந்தையின் நிலையை இன்னும் நன்றாக புரிந்துக்கொள்ள முடிந்தது" என்று நாடகத்தில் மனைவியாக நடித்த தமிழ்க்கோதை தனது கருத்தை பகிர்ந்துக் கொண்டார்.

சிற்பிகள் மன்றம் Sunlove Home ஊழியர்களையும் மறக்கவில்லை. அவர்களுக்கு தேசிய நூலக வாரியத்தின் உதவியோடு மண்ணுக்குள் வைரம் சிறுகதையை அறிமுகப்படுத்தி, அவர்களோடு இணைந்து அது பற்றி கலந்துரையாடினர். "அதனால் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் அவர்களில் பெரும்பாலோர் சிங்கப்பூர் வாழ்க்கையைப் பற்றி மேலும் தெரிந்துக்கொள்ள முடிந்தது" என்று Sunlove Home உதவி நிர்வாகி திரு செல்வன் குறிப்பிட்டார்.



Dr. Theyvendran launching the Reading Club


Members of Sirpigal

Sirpigal first worked with National Library who initiated a reading programme on 31 May 2008. This programme was done under NLB's Read Singapore initiative. About 20 people took part in the discussion which was held in Tampines McDonalds. There was a good mixture of both young and old people who took part in the discussion.

Sirpigal subsequently launched its Reading Club on 31 August 2008 at Sunlove Home. The objective of the Reading Club is to increase readership of books amongst Tamils. On the launch of the Reading Club, a dramatisation of the story "*Mannukul Vairam*" took place. The story was written by the late author Mr Shanmugam. The dramatisation was very hilarious and entertaining depicting a story about a conservative Tamil family whose daughter loved a man from a different caste and who was also not able to speak good Tamil. The story showed how the parents accepted the marriage proposal for their daughter. Great cast by Thamizkkothai, John, Sudha and Mohan. This was followed by an entertaining programme for guests and also residents of Sunlove Home. About 50 guests attended the event. Both the guests and residents enjoyed the dramatisation and the show. A book discussion was also held after the entertainment programme.

Sirpigal is grateful to Mr Maniam from National Library in facilitating the Reading programme and Launch of the Reading Club. Sirpigal is also thankful to Dr Theyvendran, President, Tamils Representative Council for launching the Reading Club, Mr Rajamohan from Sunlove, all guests and all artistes who supported the event.

TRC Bursary Awards 2009



Recipients of the Bursary with TRC officials

TRC has been giving out bursaries to students from low-in-come families since 2000. For the year 2009, 120 students received about $25,000. This was double the amount given out last year.

The objective of the Bursary Awards is to reach out to the under-privileged students and give them financial assistance to motivate them to study hard and excel.

Taking into consideration the current financial crisis, TRC has increased the income from $1,500 to $2,000. This allows for middle income families to benefit too.

Apart from this Bursary Awards TRC is also looking into providing other form of assistance to Indian families who are in need.

More than 400 were present to witness the presentation at MDIS Unicampus on 3.1.2009.

Awards were presented by the union leader of the Indian Organisation affiliated to TRC.



President and Vice President, TRC with award recipients



Young recipients with TRC President

Ponggal Vizha 2009

Little India Shopkeepers and Heritage Association (LISHA) has been organising this week long celebration at Little India for the past few years. This year's celebration was held from 10th - 18th January 2009.

TRC which has been a pioneer supporter for this celebration put up a special cultural programme on 14.01.2009 (Ponggal Day itself). Despite it being a weekday, the organisers were overwhelmed by more than 4,000 people who turned up and stayed until the end.

The whole of Campbell Lane was blocked by the mass gathering of Indians (Local and Foreign). Chairman of LISHA, Mr Raj Kumar was surprised by the turnout and commented that this was the first time he had seen such a crowd on a weekday.

The 4,000 odd people were entertained by artistes from Sirpigal which featured a lively and entertaining 3 hour programme.

Happy Ponggal to one and all!



Dance performance by Sirpigal



A record crowd of more than 4000



Members of Sirpigal who performed

Sri Guru Ragavendra Society (SGRSS), Fund Raising Dinner


Speech by the President


Committee having dinner


Residents from Bukit Batok Home


Guest performers on stage



A dance drama


Audience performance

Sri Guru Ragavendra Society (SGRSS), an affiliate of TRC, held its first fund raising dinner on October 12 at Singapore Futsing Association. SGRSS, formed in 2004, spreads the message of the Saint Guru Ragavendra. It hold Bhajans every Thursdays at 7.30pm at the vacant space next to Perumal Temple. About 70-100 devotees attend this Bhajans every Thursdays. Besides the Bhajans, SGRSS also does yearly trips to Mantralayam the place where the Guru reach eternity. *Aradhanai* is another event which is celebrated by the Society. *Aradhanai* is celebrated over a 3-day period and it normally takes place in August. Prayers, Bhajans, carrying of Milk Pots and cultural programmes are held during the *Aradhanai* period.

Sirpigal - Sculptors of Arts did the programme management for their fund raising event. They lined up an entertaining programme with excellent performances by dancers, singers and "Sivaji". A delicious spread of buffet both vegetarian and non-vegetarian appeased the hungry crowd of 500. SGRSS also brought 40 residents from Bukit Batok Home for the Aged to join in the event.

Mr Rajkumar, President, SGRSS, in his speech said the SGRSS has attracted not only Indians but also a number of Chinese devotees. He said that SGRSS is growing steadily and hopes to have its own permanent premises to conduct their prayers and bhajans.

SGRSS is grateful to all those who attended and donated to the success of the event. SGRSS is to thankful to Tamil's Representative Council, Hindu Endowment Board, TRC Multi-Purpose Co-operative, Potong Pasir Temple, Sengkang Temple, Jothi Stores, Komala Vilas, Abirami Jewellers and Hindu Centre.

கல்வி உபகார நிதி 2009

கடந்த 8 ஆண்டுகளாக, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மாணவர்களுக்கு தமிழர் பேரவை கல்வி உபகார நிதி வழங்கி வந்துள்ளது.

இவ்வாண்டு 150 மாணவர்களுக்கு, $25,000க்கு மேல் நிதி வழங்கப்பட்டது. இது சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட நிதியைவிட இரண்டு மடங்காகும். இப்பொழுது நிலவி வரும் பொருளாதார மந்த நிலையை கருத்தில் கொண்டு மேலும் அதிகமான மாணவர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.
எந்த ஒரு மாணவனும் சிங்கப்பூரில் கல்வி கற்பதற்கு தமக்கு நிதி வசதி இல்லை என்ற காரணத்தினால் பாதிக்கப்படக்கூடாது என்பது நமது அரசாங்கத்தின் கொள்கை. இதனை மனதில் கொண்டே தமிழர் பேரவை, சிண்டா, சிங்கப்பூர் இந்திய கல்வி அறக்கட்டளை வாரியம் போன்ற அமைப்புகள் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு நிதி உதவி அளித்து வருகின்றன. இவ்வமைப்புகளை தவிர்த்து பேரவையின் இணை உறுப்பினர்களான, செம்பவாங் தமிழர் சங்கம், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், ருத்ரகாளியம்மன் கோயில் போன்ற அமைப்புகளும் நிதி உதவி அளித்து வருகின்றன.

மாணவர்களுக்கு நிதி உதவி அளிப்பதோடு இல்லாமல், மற்ற வகைகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி அளிக்க பேரவை திட்டமிட்டுள்ளது.
பேரவையின் நிதி வழங்கும் நிகழ்ச்சி 3.1.2009 அன்று மிடிஜசி வளாகத்தில் நடைபெற்றது. விருதுகளை பேரவையின் இணை அமைப்புகளின் தலைவர்கள் வழங்கினர்.

.....continued from page 1

.....1ம் பக்கம் தொடர்ச்சி



President walking Dr. Balaji and other officials

- Create awareness on the opportunities available, as our Community is not coming forward to seek help;
- Lack of quality leadership;
- Explore ways to attract and assimilate the Youths;
- Endorsement of TRC as the leading body and representative of the Tamil Organisations;
- TRC's website is available for Organisations to publicise their activities and it will also put up a calendar of Community Activities;
- TRC will facilitate in coordinating issues raised by the various organizations and address it with the relevant authorities;

TRC will call for a Secretarial meeting with all Organisations on a regular basis to engage the organisations and better manage the activities.
At the end of the session, President of TRC, Dr R Theyvendran assured that all the issues raised will be further discussed and addressed as necessary.

The continued support and cooperation of all present was proof that TRC is on the right path and well placed to represent the Singapore Tamils.

General Secretary of TRC, Mr Pandiyan requested all organisations to forward details of their activities to TRC. This will allow for a co-ordinated calendar of activities to be put up on TRC's website.



Dr. Balaji sharing his thoughts



An interesting dialogue session indeed



Grassroot leaders at the discussion

கூட்டத்தின் இறுதியில் பேரவையின் தலைவர் டாக்டர் தேவேந்திரன் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பிரச்னைகளுக்கும் எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்களுக்கு, இதர அமைப்புகளுடன் கலந்து பேசி தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.
அமைப்புகளின் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து பேரவையின் வலைபக்கத்தில் ஒரு அட்டவணைக்கு ஏற்பாடு செய்யமுடியும் எனப் பேரவையின் செயலாளர் திரு பாண்டியன் கூறினார். அதற்கு அமைப்புகள் அவர்களின் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை அவ்வப்போது அனுப்பிவைக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.
கூட்டத்தின் இறுதியில் அனைவரும் மதிய உணவில் கலந்துக்கொண்டனர்.

பொங்கல் திருவிழா 2009

லிட்டில் இந்தியா கடைக்காரர்கள் மற்றும் மரபுடைமை சங்கம் கடந்த சில ஆண்டுகளாக பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடி வந்துள்ளது. இந்த ஆண்டு இக்கொண்டாட்டம் 10.1.2009 முதல் 18.1.2009 வரை நடைபெற்றது.

இதன் தொடக்க விழாவில், வெளியுறவு அமைச்சுக்கான மூத்த துணை அமைச்சர் டாக்டர் பாலாஜி சதாசிவன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கொண்டாட்டத்தின் சிறப்பு அங்கமாக ஒவ்வொரு நாளும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவிற்கு ஆதரவு அளித்து வந்துள்ள தமிழர் பேரவை, இவ்வாண்டு 14.1.2009 பொங்கல் திருநாளன்று, சிறப்பான கலை நிகழ்ச்சி ஒன்றை படைத்துள்ளது. பேரவையின் இணை அமைப்பான சிற்பிகளின் கலைஞர்களைக் கொண்டு நடந்தேறிய கலை விழா சிறப்பாக அமைந்தது என சொன்னால் மிகையாகாது. கண்ணை கவரும் நடனங்கள், பார்வையாளர்களை ஆடவைத்த பாடல்கள் இன்றும் நினைவில் நிற்கின்றன.

பொங்கல் திருநாளன்று, அதுவும் வார நாளில் பல்லாயிரம் கணக்கான மக்கள் திரண்டு கேம்ப்பெல் சாலையே இடம் கொள்ளாமல் மக்கள் வெள்ளம் கரைபுரண்டது.

அன்று லிட்டில் இந்தியாவில் கூடியிருந்தவர்களுக்கு உண்மையிலேயே பொங்கல் திருநாள் நினைவில் நீங்கா நாளாக அமைந்துவிட்டது.

FAREWELL TO A COUNCIL MEMBER

N.S. Kumar



The President & Members of the Tamils Representative Council sadly announces the sudden demise of our Council Member NamasivayamSampath Kumar on 16 February 2009.

N. S. Kumar by which he is fondly known, has been an active councilor and ardent community leader who, being an educationalist, spearheaded various educational initiatives and community bonding programmes on behalf of TRC.

In his eulogy, TRC President, Dr. R Theyvendran praised Kumar for his dedication to the cause of the Tamil community and for his concern for the welfare of Indian students. He further went on to add that he was touched, just like everyone present, by Kumar's ever ready smile , his great humility and absolute sincerity. In his professional capacity, he remembered Kumar for his deep and far sighted thinking and for his immense knowledge and expertise.

The Tamils Representative Council conveys its heartfelt condolences to the family of N.S. Kumar.

We have lost a good man.

Activities for 2009

04.04.2009	National Tamil Story-Telling Competition for Primary Schools
11.04.2009	National Tamil Public-Speaking Competition for Secondary Students
18.04.2009	Forum – Progress with Tamil
25.04.2009	Tamil Festival Celebrations
24.05.2009	Annual General Meeting
26.07.2009	Dialogue session with Indian Youths
29.08.2009	National Day Celebration & TRC Excellence Awards
29.11.2009	Deepavali tea with Indian community Organization
27.12.2009	TRC Bursary Awards

WE GRIEF

V. Thirunavukarusu, PBM

We grief the passing of V. Thirunavukarasu on 5th November 2008, who contributed much to the Tamil Language Movement in Singapore and the growth of Tamil. He was also, the former editor of Tamil Murasu and a good man.

Our deepest condolences is extended to his family and loved ones.

வருந்துகிறோம்



திரு. வை. திருநாவுக்கரசு PBM

சிங்கையில் தமிழ் மொழிக்கும், அதன் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியவரும், தமிழ் முரசு முன்னாள் ஆசிரியரும், சிறந்த பண்பாளருமான **திரு. வை. திருநாவுக்கரசு** அவர்களின் மறைவு, தெரிந்து மிகவும் வருந்துகிறோம்.

பிரிவால் துயரடைந்துள்ள அவர்கள் தம் குடும்பத்தினருக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழர் பேரவை, சிங்கப்பூர்
Tamils Representative Council, Singapore

தமிழர் பேரவை பன்னோக்குக் கூட்டுறவுக் கழகம்
TRC Multi-Purpose Co-operative Society

From: Management Council, Board of Directors
And All Members

1 Sophia Road #03-08 Peace Centre, Singapore 228149

SIMPLIFIED KUNDALINI YOGA SOCIETY எளியமுறை குண்டலினி யோகா சங்கம்

We Conduct

MEDITATION **YOGA EXERCISE** **KAYA KALPA YOGA**

www.skysociety.org.sg

93874955/96387274/90266670/96255145